ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

பரமேசுவரனும், மன்வாதிகளானபெரியோர்களும், சுருதிவாயிலாகவும் ஸ்மிருதிபுராணாதி வாயிலாகவும்ஸத்தியம் சொல்லவேண்டும். தர்மம்செய்ய வேண்டுமென்பதாதிபரலோகஸாதனங்களையேபரமோபதேசமாகச்செய்து வந்தார்கள். தற்காலத்திலோவெனில் அதையெல்லாம்புறக்கணித்துவிட்டு பரமேசுவரனைக்கூட மதிக்காமல்-“தெய்வமென்று தயங்காதீர்-மன்வாதிகளைமஹானென்று மயங்காதீர், மஹரிஷிகளின் மொழிகளென்றுமோசம், போகாதீர்—வர்ணாச்சிரமிகளைக்கண்டு வணங்காதீர்—” என்பதாதி யாகத் தெருத்தெருவாய் அலைந்து அலரிக்கொண்டு போகிறார்கள். இதைப் பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும் பிரபலர்களெல்லாம் பேசாமலிருக்கிறார்கள். அவர்கள் வெகுதூரம் சென்றதன் பிறகு இரஹஸ்யமாய்இதென்னபைத்தியக்காரத்தனமென்று தன் காதுக்குக்கூட கேழ்க்காதபடி முணுமுணுத்துக் கொள்ளுகிறார்கள். அதர்மச்செயல்களை ஒருநாளைக்கு ஒருவன் எக்காரணத்தைக்கொண்டோ செய்துவிடுவானாகில் அந்த தினத்தைப் பின்னிட்டு பெரிதாகக்கொண்டாடிப் பண்டிகை கொண்டாடுகிறார்கள். ஜில்லாவுக்கொருவராவது பழைய வழக்கப்படி யாகாதிநற்கிரியைகளைச் செய்யத்தலையெடுத்தால் அவரது கார்யத்தைக் கெடுக்க பலர் முன்வருகிறார்கள். கொட்டகையைக் கொளுத்துவதாக ஆரவாரம்செய்து பயமுறுத்துகிறார்கள். முன் யுகங்களில் விசுவாமித்திராதிகள் யாகம்செய்ய ஆரம்பித்தால் மாயாவிகளான மாரீசன் முதலிய ராக்ஷஸர் இரத்தத்தையும், மாம்ஸத்தையும் வாரியிறைத்து, ஸ்ருக், ஸ்ருவம் முதலிய யாகபாத்திரங்களை உடைத்து, தெத்திப்பல்லும், செம்பட்டை மயிரும் கோரரூபமும் பார்க்கப்பயங்கரமான சரீரத்தைக்காட்டி தீக்ஷித பத்னிகளை அதட்டி உருக்கிப்பலவாறாகக் கெடுப்பார்களென்று ஸ்ரீ ராமாயணத்தில் கதை கூறப்படுகிறது. நற்காரியம் நடைபெறும்பொழுது இப்படிச் செய்வார்களா? இது கட்டுக்கதையாயிருக்கலாமென்று நினைப்பவர்கள் பிரத்தியக்ஷமாகக் கொடிய செயல்களைத் தற்போது பார்த்தால் அதை வாஸ்தவமென்றே நிச்சயிப்பார்கள். இந்த விஷயங்களில் ராஜாங்கம் உதாஸீனமாயிருந்துவருகிறது. நற்கார்யம் நடைபெறாவிடில் ஜகத்திற்கே க்ஷேமம் கிடைக்காது என்பதைத் தற்காலத்தவர்களும் ஒப்புக்கொள்ளாமலில்லை. ஆனால் எது நற்காரியமென்பதிற்றான் விவாதப்படுகிறார்கள். இந்த விஷயத்தில் புது நாகரீகக்காரர்களின் பக்ஷத்தைப் பிடிக்காமல் பிராசீனர்களின் வழியிலேயேசென்று எல்லோரும் சுகப்படுவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

ப்ரஜாபதி-௵ ஆடி-௴ ௧௫௨

பிரும்மலோகத்தின் பெருமை.

ஸத்தியலோகமெனப்படுவதே பிரம்மலோகமாம். அதில் நான்குவிதமான தேவஜாதிகளிருக்கிறார்களாம். அச்யுதர்கள். சுத்த நிவாஸர்கள், ஸத்தியாபர்கள், ஸம்யாஸம்ஞிகள் என்று அவர்களின் பெயர். அவர்களுள் அச்யுதர்கள் ஸ்தூலவிஷயங்களைத் தியானம்செய்துகொண்டு அதனாலேயே ஆனந்தப்படுகிறார்கள். சுத்த நிவாஸர்கள் ஸூக்ஷ்ம விஷயங்களைத் தியானம் செய்வதால் ஆனந்தப்பட்டு திருப்தியடைகிறார்கள். ஸத்தியாபர்கள் இந்திரியத்தியானத்தாலேயே திருப்திபடுகிறார்கள். ஸம்ஞாஸம்ஞிகளென்பவர்கள் அஹங்கார தியானத்தாலேயே திருப்தி அடைகிறார்கன். இவர்களெல்லோரும் ஸம்பிரக்ஞாத ஸமாதியென்கிறஸ விகல்ப்ப ஸமாதியடைந்தவர்கள். இவர்களெல்லோருக்கும் வஸிப்பதற்கென்று அமைக்கப்பட்ட வீடுகள் கிடையாது. தன் சரீரத்தையே வீடாக பாவித்து கொண்டவர்கள், ஒருவர்க்கொருவர் மேலாயுள்ளவர்கள். பிரதானமென்ற மாயா சக்தியை வசப்படுத்திக்கொண்டவர்கள். பிரம்மகல்ப்பம் பூருவும் ஜீவித்திருப்பவர்கள். இவர்களும் திரைலோக்கிய மத்தியிலிருப்பவர்களேயன்றி லோகாதீதர்களல்ல. பிரும்மலோகத்தில் அபாராஜிதையென்ற பட்டணமும், பிரபுவான ஹிரண்யகர்ப்பர் வஸிக்கும் விமானமும், ஸோமரஸத்தை பெருகவிடும் அசுவத்த விருக்ஷமும், சந்தோஷகரமான நான்குவித அன்னமயங்களான மடுக்களும், நினைத்தமாத்திரத்திலேயே ஸகல போகங்களையுந் தரக்கூடிய ஸ்தலங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றனவாம். இந்த பிரம்மலோகத்தின் விபூதிகள் மந்திரார்த்தவாதிகளான வேதபாகங்களில் பலவாறாகக் கொண்டாடப்படுகின்றன. இதை அடைவது சுலபமில்லை. இத்தகைய லோகத்தையடைந்தும்

சிலர் போகாஸக்தர்களாயிருப்பார்கள். அவர்கள் அடுத்த பிரம்ம கல்பத்தில் மீண்டும் ஸம்ஸாரபந்தத்தையடையத் திரும்பிவிடுவார்கள். அப்படிக்கில்லாமல் விதேஹப்பிரகிருதியாள் என்றவர்கள் நிர்விகல்ப்ப ஸமாதியிலிருப்பவர்கள். இவர்களுக்கு எவ்வித விருத்தியுமில்லாமையால் இவர்கள் லோகாதீதர்கள். ஜீவன் முக்தி நிலையிலிருப்பவர்கள். பிரம்மஸாக்ஷாத்காரம் பெற்றவர்கள். பிராரப்தம் முடிந்தவுடன் விதேஹ கைவல்யத்தை அடையக்கூடியவர்கள். பிரம்மலோகம் சென்றதுமுதல் ஆங்கு ஆனந்தபாக்ஹறாவில் ப்ரம்மதேவரோடு வேதாந்த விசாரம்செய்துபரவைராக்யம்மடைந்தவர்களாதல்பற்றி விஷயபோகத்தில் ஆசைப்படாமல் ஒரே ப்ரம்மநிஷ்டையிலிருக்கும் பாக்கியம் பெற்றவர்களாகையால் மீண்டும் ஸம்ஸாரமண்டலத்தில்திரும்புவதில்லை. இவ்வாறு ப்ரம்மலோகஞ்சென்று ப்ரம்மதேவரோடு வேதாந்த விசாரம்செய்து அடையக்கூடிய விதேஹ கைவல்யம் நம் பாரதபூமியில் வஸிக்கும் பாக்கியம் பெற்றவர்களுக்குக் கிடைப்பதாகவும், "இங்கேயே ஞானயோகத்தையடைந்து ப்ரம்மஸாக்ஷாத்காரம் பெற்றுவிட்டால் அந்த க்ஷணத்திலேயே சச்சிதானந்தவடிவ ப்ரம்ம ஸ்வரூபமான மோக்ஷம் கிடைத்திடும். இன்றேல் பெருத்த நஷ்டம் ஜன்மத்திற்கே நேர்ந்துவிடும்" என்பதாகவும் உபநிடதங்கள் ஒரே தாத்பர்யத்துடன் கோஷிக்கின்றன. அத்தகைய புண்ணிய பூமியாகிய பாரதபூமியையடைந்த புண்ணியவான்களுடைய குலத்திலுதித்தும் சிலர் தற்காலத்திய பரிஷ்காரகாரர்களுடைய வலையில் சிக்கிக்கொண்டுஇந்தபாக்கியத்தை இழந்துவிடப் பாடுபடுறார்கள். புனிதமான புண்ணியப் பிறவியைப் பாழாயடிக்காமல் பிராசீன முறைப்படி வர்ணாச்சிரம தர்மத்தை அனுஷ்டித்து சித்த சுத்தி முதலான பரம்பரையாக பரமார்த்தவழியிலீடுபட்டுத் புருஷார்த்தத்தை எவரும் அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

விச்வகீதார்த்தோபஸம்ஹாரம்.

ஸ்ரீ பகவத்கீதையின் 18-வது அத்யாயஸங்கிரஹம்.

(588-வதுபக்கத்தொடர்ச்சி)

பக்தியில்தான் கீதா சாஸ்திர தாத்பரியமென்று இவர் சொல்லியிருப்பது தவறேயாகும். ஏனெனின் பக்தி சாஸ்திரமாக கீதாசாஸ்திரத்தை த்வைதிகளும் விசிஷ்டாத்வைதிகளும் ஒப்புக்கொண்டிருப்பதால், இவருக்குமவர்களுக்கும் என்ன பேதம். தவிர, इति ते ज्ञानमाख्यातम् என்ற சுலோகத்திற்கு

सर्वगीतार्थमुपसंहरन्नाह इतीति ।

என்று இவர் அவதாரிகை செய்திருக்கிறார். அதனால் இவருக்கும் "ஞானத்தில்தான் கீதாசாஸ்த்ர தாத்பர்யம்" என்பது வ்யக்தமாகத் தெரிகின்றது. இந்த சுலோகத்தில் முன்னுக்குப்பின் விரோதமாக எப்படி பக்திபரமாக கீதாசாஸ்திரத்தை இவர் சொல்வது ஸரியாகும்.

அன்றியும் இவர் இந்த சுலோகத்துக்கு அர்த்தஞ் சொல்லி இருப்பதும் ஸரியில்லை.

परित्यज्य என்றால் अनादृत्य என்னும் அர்த்தம் முக்கியமாகுமா? मामेकं शरणं व्रज என்றதினாலேயே सर्वधर्मान्परित्यज्य என்ற பாதத்தினர்த்தம் ஸித்தித்துவிடுவதால், அந்தபாதமனாவசியமாயுமிவருடைய பக்ஷத்தில் ஏற்பட்டுவிடும். ஆதலால் சப்தார்த்தமுமிவருடைய பக்ஷத்தில் ஸரியில்லை. இப்படி இருக்கும்போது இவர் பாஷ்யவிருத்தமாக எதற்காக அர்த்தஞ்சொல்லவேண்டும். பாஷ்யத்தில் என்ன அஸ்வாரஸ்யத்தை இவர் கண்டுவிட்டார். எதற்காகக் காரணமின்றி இவர் பாஷ்யவிருத்தார்த்தம் கூறவேண்டுமென்பது புரியவில்லை. ஸன்னியாஸத்திலும் ஞான நிஷ்டையிலும் அர்ஜ்ஜுனனுக்கு அதிகாரமில்லையாதலால் பாஷ்யார்த்தம் ஸரியில்லை என்று இவரபிப்பிராயமஸங்கதம். அப்படியானால் பகவான் 12-அத்தியாயங்களுடனல்லவா கீதாசாஸ்திரத்தை முடித்திருக்கவேண்டும். ஆகவே 6-அத்தியாயங்களும் அனாவசியம் என்றல்லவா ஸித்திக்கும். மூன்றாவது 6-அத்தியாயங்களும் ஞானகாண்டார்த்தத்தைத் தெரிவிப்பதற்காகவென்று இவரே

கீதாசாஸ்திராரம்பத்தில் தெருவித்திருக்கின்றார். ஞானத்திற்கு அதிகாரமில்லாத அர்ஜுனனுக்கு ஞானகாண்டார்த்தத்தையே தான் பகவான் உபதேசிக்கலாம் என்ற கேள்வி இந்த சுலோகத்தில்மட்டிலும் இவர் எப்படி கேட்கலாம். அர்ஜுனனுக்கு ஞானத்தை முன் அத்தியாயங்களிலும் உபதேசிக்காமலல்லவா இருக்கவேண்டும்.

தவிர ஞானத்தையும் ஸன்யாஸத்தையும் அர்ஜுனனுக்கு உபதேசஞ்செய்திருப்பதற்குத் தாத்பரியமென்னவென்றால், அர்ஜ்ஜுனனை வியாஜமாய் வைத்துக்கொண்டு மற்ற முமுக்ஷுக்களுக்காகத்தான் என்று ஏன் தாத்பரியம் சொல்லக்கூடாது. ஆகையால் மதுஸூதன ஸ்வாமிகளின் அபிப்பிராயம் ஸரியல்ல.

ஆதலால் ஞானத்தில்தான் கீதா சாஸ்திரத்திற்குத் தாத்பர்யம். சுருதிஸ்மிருதிகளுக்கு இவ்விதஞானநிஷ்டையில்தான் முக்ய தாத்பரியம். ஆகவே த்வைதிகளின் ஸித்தாந்தமும் அஸங்கதம்.

உண்மையில் இவ்விடத்தில் ஒரு விஷயம் விசாரிக்க வேண்டும்.

ஸ்ரீமதுஸூதனஸரஸ்வதீ சுவாமிகளவர்கள் सर्वधर्मान्परित्यज्य என்றவிடத்தில் பக்திப்ரதானம் கீதா சாஸ்திரம் என்று சொல்லியிருந்தாலும் அதுவும் பொருத்தமுடையதுதான். ஏனென்றால் இவர் அத்வைத ஸித்தி முதலிய பெரியக்கிரந்தங்களை இயற்றியவராவர். இதனாலேயே ஸகல சுருதிஸ்மிருதிகளுக்கும் அத்வைதக்ஞானத்தில்தான் தாத்பரியமென்பது இவருக்கு ஸம்மதமென்று நன்கு புலனாகும். இந்த பகவத் கீதையிலும் முந்திய அத்தியாயங்களில் அனேகவிடத்தில் அத்வைதமத ஸம்மதமான ஆத்மஞானத்தையும் அபேதத்தையும் சாஸ்திரத்திற்கும் கர்மா, யோகம் முதலிய ஸாதனங்களுக்கும் ஞானத்தில்தான் தாத்பரியமென்பதையும் இவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால் ஸ்ரீபாகவதாதி கிரந்தங்களைப்போல் பகவத் கீதையையும் பக்திப் பிரதானமாகவே ஒப்புக்கொண்டாலும் அதிக தோஷமில்லை என்றிவாது அபிப்பிராயம். பாகவதத்தில் ஞான நிஷ்டையைப் பலவிடத்தில் சொல்லியிருந்தாலும் ஞானப்பிரதானமென்று அதை ஸ்ரீதராசாரிய ஸ்வாமிகளவர்கள் ஒப்புக்கொள்வதில்லையாதலால் அவருடைய கீதாவியாக்கியானத்தை பலவிடத்

தில் அனுஸரித்துப்பேசும் மதுஸூதன சாஸ்வதீஸ்வாமிகளவர்களும் கீதைக்கு பக்தியில் மஹா தாத்பரியத்தையும், ஞானத்தில் அவாந்தர தாத்பரியத்தையும், அங்கீகாரம்செய்வது உசிதந்தான். ஸ்ரீ தராசாரியஸ்வாமிகளுக்கும் இவ்விதமேதான்கீதையின் அபிப்பிராயமாகும்.

தவிர மதுஸூதந ஸாஸ்வதீ ஸ்வாமிகள் ஸகுணோபாஸ்தியில்தான் விசேஷ பக்தியுள்ளவர். நிர்குணோபஸனத்திலிவருக்குத் தாத்பரியமில்லை. இந்த விஷயம் அத்வைத ஸித்தியில் நிர்குணோபாஸனத்தை நிராகரித்திருப்பதாலும் இவருடைய கீதா வியாக்கியானத்தாலும் தெரியவருகிறது. அப்படியே அத்வைத ஸம்மதாத்மஞான நிஷ்டையையும் இவர் அங்கீகரித்திருப்பவரேயாவர். அத்வைத தர்சன கர்த்தாவென்று புகழடைந்து விளக்கும் ஸாஸ்வதீஸ்வாமிகளுக்கு ஆத்மஞான நிஷ்டை இல்லையென்பது தகாது. ஆனுல் கீதாசாஸ்திரம் மட்டிலும் பக்திப்பிரதானம் என்றிவர் சொல்லுவதற்கும் காரணம் யாதென்றுல் ஆத்மஞான நிஷ்டர்களுக்குங் கூட "பகவத்பக்தி" என்பது அவசியமே தானென்றிவ்வாறு பக்தியின் விசேஷ மஹிமையையும், பக்தி மார்க்கத்தில் தனக்கு விசேஷ பக்தியுண்டென்பதையும் பஹிரங்கஞ்செய்வது தான் ஆகும்.

ஆத்மஞானிகளும் பக்தி செய்ய வேண்டும்என்பது ஸ்ரீ பாகவதாதிப் பிரமாணப் பிரஸித்தந்தான்.

> आत्मारामाश्च मुनयः निर्ग्रन्था अप्युरुक्रमे ।
> कुर्वन्त्यहैतुकीं भक्तिं इत्थं भूतगणोहरिः ॥
> निवृत्ततर्षैरुपगीयमानात् ।
> संक्षोभमक्षरजुषामपि चित्ततन्वोः ।

என்பதாதி பாகவத வசனத்தைப் பாராமர்சித்தால் இது வெளியாகும்.

பகவத்கீதையிலும் ज्ञानीचभरतर्षभ என்றவிடத்தில் ஞானிக்கும் பக்தி ஸம்பவித்தே தீரும் என்பதை பகவானும் சொல்லியிருக்கிறுர்.

தவிர வாஸிஷ்டாதிகளில் ஞானிக்கு ஜீவன் முக்தி ஸுகலாபத்திற்காக அப்யாஸம், யோகம் முதலிய ஸாதனங்களை யவலம்

பிப்பதுடன் பக்தி மார்க்கத்தையும் ஸேவித்துவரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றை ஆலோசித்துத்தான் "ஸர்வதர்மான் பரித்யஜ்ய" என்றவிடத்தில் ஸாத்யபக்தி நிஷ்டையை மதுஸூதனஸ்வாமிகள் உபஸம்ஹாரித்தார்.

ततो मां तत्वतो ज्ञात्वा विशते तदनन्तरम्।
इति ते ज्ञानमाख्यातम् ।

என்ற சுலோகத்திலும் ஆத்மஞான நிஷ்டையை அறிவிப்பதோடு நிற்காமல் அதிலேயே உபஸம்ஹாரம் செய்திருக்கிறார். ஆகவே இவருக்கு ஞானம், பக்தி இவ்விரண்டிலும் கீதா சாஸ்திரத்திற்குத் தாத்பர்யமென்று அபிப்பிராயம். ஆகவே இவருடைய வியாக்யானம் பகவத்பாத பாஷ்யத்திற்கு விருத்தம்போல் புலப்பட்டாலும் அத்வைத மதத்திற்கு கொஞ்சமும் விருத்தமில்லை. இவ்வித கருத்தோடுதானிவர் கீதையின் வியாக்கியானத்தில் பலவிடங்களில் ஸ்ரீ பகவத்பாதாளை பின்பற்றுவதில்லை. இதனால் ஸ்ரீமத் பகவத்பாதாளிடம் மதிப்புக்குறைவு இவருக்கு இல்லை. பலவிடங்களில் பகவத்பாதாளின் கீதாபாஷ்யத்தைத் தமது வியாக்கியானத்தில் புகழ்ந்தும் பேசியிருக்கிறார். இவர் பகவத்பாதபாஷ்யத்தை விசாரித்துத்தான் கீதா வியாக்கியானமெழுத முற்படுவதாகவும்,

भगवत्पादभाष्यार्थमालोच्यातिप्रयत्नतः ।

என்று மங்கள சுலோகத்திலேயே பிரதிக்ஞை பண்ணியிருக்கிறார். ஆகவே ஸ்ரீமத் பகவத்பாதாளிடம் இவருக்கு பக்தி விசேஷம் அளவிறந்தது, ஆதலால் இவருடைய கீதா வியாக்கியானத்தையும் நிந்திப்பது யுக்தமில்லை. இவர் விசிஷ்டாத்வைதிகளைப்போல் கீதா சாஸ்திரம் சரணாகதி சாஸ்திரமென்று கூறவில்லையே. அத்வைதிகளுக்கும் சரணாகதி என்பது உண்டு. ஆனால் அஃதெப்படி என்னும் விஷயத்தை நிரூபிக்கவேண்டுமென்ற கருத்துடன் இவர் கீதையை பக்திப் பிரதானமாக சொன்னாரேயொழிய விசிஷ்டாத்வைதிகள் கருதுகிறபடி சரணாகதியை ஒப்புக்கொண்டு அதில் கீதைக்குத் தாத்பர்யமென்று இவர் சொல்லவில்லை. ஆதலால் இவர் சரணாகதியென்றிவ்விடத்தில் சொல்லியிருப்பதை வைத்துக் கொண்டு விசிஷ்டாத்வைதிகளாக இவரை நினைப்பது மிகவுமனுசி

தம். ஆகையால் இப்பகவத்கீதைக்கு இவ்விருவரின் வியாக்கி னமும் சரியானதுதான். விசிஷ்டாத்வைதிகளின் கீதா வியாக்கி யானமோவென்றால் பகவத் கீதைக்கே விருத்தமென்று முன்பு சிலவிடங்களில் எடுத்துக்காட்டியுள்ளோம். ஆதலால் ஸ்ரீ பகவத் பாதபாஷ்யத்தையோ அல்லது மதுஸூதனஸரஸ்வதீஸ்வாமிகளின் வியாக்கியானத்தையோ அவலம்பித்துக்கொண்டு பகவத் கீதார்த்த விசாரஞ்செய்து ஞானத்தால் பேறின்பவீடு சேருவது வதுதான்ஸுலபம். கீதாசாரியாளுக்குப்பகவத்பாதபாஷ்யந்தான் ஸம்மதம். மற்ற வியாக்கியானங்களில்லை. இவ்விஷயத்தை 13-வது அத்தியாயத்தின் ஆரம்பத்தில் மதுஸூதன ஸரஸ்வதீ ஸ்வா மிகள் அவர்கள்

> ध्यानाभ्यासवशीकृतेन मनसा यन्निर्गुणं निष्कलं
> ज्योतिः किञ्चन योगिनो यदि परं पश्यन्ति पश्यन्तु ते ।
> अस्माकं तु तदेव लोचनचमत्काराय भूयाच्चिरं
> कालिन्दीपुलिनोदरे महति यन्नीलं महो धावति ॥

என்ற சுலோகத்தால் விசதப்படுத்தியிருப்பது கவனிக்கத்தக்கதே யாகும்.

பகவத்கீதா பாராயண பலன்.

இவ்விதம் கீதையை அர்த்தவிசாரஞ்செய்தால்தான் ஞானம் மோக்ஷம் இவை ஸித்திக்கும் என்பதில்லை. குருபதேச மூலமாக பகவத் கீதையைப் பாராயணம் பக்தி ச்ரத்தையுடன் பண்ணிக் கொண்டுவந்தாலும் கீதார்த்த விசாரத்தால் ஸம்பவிக்கும் பிரயோ ஜனம் கிடைத்துவிடும்.

பகவத்கீதா பாராயணமானது: ஜபயக்ஞமாகுமானதால் ஸ்வர்க்காதி லோகங்களும் ஸித்தித்துவிடும். ஜபயக்ஞமென்பது ஞானயக்ஞமுமாகும். திரவிய யக்ஞத்தைக்காட்டிலும் ஞான யக் ஞந்தான் மேலானது.

> श्रेयान्द्रव्यमयाद्यज्ञाज्ज्ञानयज्ञः परन्तप ।

என்றும் பகவான் சொல்லியிருக்கிறாரல்லவா?

பகவத்கீதையை குருபதேசவாயிலாகப் பாராயணம் செய்ப வர்களுக்கு அக்ஞானம், அதன் காரியமும், அடியோடு அற்று

விடும். இதனால் மோக்ஷமும் ஸித்தித்துவிடும். இவ்விஷயத்தை நஷ்டோமோஹ: என்ற ச்லோகத்தில் அர்ஜுனன் கூறியிருக்கிறான். இங்கு மோஹ பதத்திற்கு ஸம்ஸார பந்தத்திற்குக் காரணமாகிய மூலாக்ஞானமும் அர்த்தம்.

இதனால் ஒன்று வெளியாகிறது. அர்ஜுனன் யுத்தஞ்செய்வதில் சோகமோஹத்தை அடைந்தானேயொழிய ஸம்ஸாரத்திலல்ல. அப்படிப்பட்ட அர்ஜுனன் ஸம்ஸார சோகமோஹங் கொள்ளாமலிருந்தாலும் பகவானுடைய உபதேசம் வீணாகாது. இவ்விதமிருக்க பொதுவாய் மோஹ நிவிருத்தியை அர்ஜுனன் பிரதிபாதித்திருப்பதனால் பகவானுடைய அனுக்கிரஹத்தால் மூலாக்ஞானமேயொழிந்துவிட்டதென்றால் யுத்தமோஹம் தொலைந்துவிட்டதென்பதும் ஸித்தந்தான் என்ற அர்த்தவிசேஷம் புலனாகிறது. ஆகையால் அர்ஜுனனைப்போல் முமுக்ஷுக்களனைவருக்கும் பகவத்கீதா பாராயணத்தாலேயே மோக்ஷமும் எளிதில் ஸித்தித்துவிடும் என்பதும் நிச்சயம். ஆதலால் இச்சபையோர் அனைவரும் கீதா பாராயணத்தையாவது விடாமல் செய்து வர வேண்டுமென்று நான் பிரார்த்திப்பதுடன் உபன்யாஸத்தை முடித்துக்கொள்கிறேன். சுபம்.

यत्र योगीश्वरः कृष्णो यत्र पार्थो धनुर्धरः ।
तत्र श्रीर्विजयो भूतिर्ध्रुवा नीतिर्मतं मम ॥

வீ. ஜகதீச்வர சாஸ்திரிகள்.

॥ श्रीगुरुभ्यो नमः ॥

श्रीमत्कुटवर्धनग्रामीण

श्रीमदद्वैतसभास्वागतानुमोदनपत्रिका ॥

कैलासे निवसन्विभुस्सुरगणैर्लोकावनायार्थितः
प्रादुर्भूय भुवि प्रहृत्य कुमतं कृत्वा च भाष्यादिकम् ।
सच्छिष्यं स्वपदेऽभिषिच्य भुवनक्षेमाय यो राजते
सोऽयं नः कुशलं तनोतु भगवान् श्रीशङ्कराख्यश्शिवः ॥

श्रीमत्कांचिपुरीप्रसिद्धविलसच्छ्रीकामकोट्याख्यसत्-
पीठेशोऽद्य च पण्डितालिनुतसद्धीभास्वरो योविभुः ।
कारुण्यांबुनिधिर्महान् कलिरिपुर्धर्माभिरक्षादरः
सोऽयं वर्धयतामिमामिह सभां श्रीशङ्कराख्यो गुरुः ॥

यन्नामस्मरणात् कुवादिनिकरः कोणे क्वचिल्लीयते
यच्छात्रैरभिरक्षिता सुमहिता विद्याऽवनौ राजते ।
श्रीत्यागेशमहाशयान् बुधनुतान् तान् संस्मरामस्सदा
आरब्धादरतस्सभेयमधुना संभासते यैर्भृशं ॥

यदीयमतिरद्भुता सकलराज्यभारावनं
विना व्यतनुत श्रमं निखिललोकमान्या भृशम् ।
समारभत भक्तितो य इदमुत्तमं नस्सदः
कथं नुतिपदं गतो न च स शेषुशास्त्री विभुः ॥

सकलबुधनुताशाभास्वरस्वच्छकीर्तिः
सरसनिजवचोभिर्मोदयन्तं समस्तान् ।
महिततरसभायां हेतुभूतश्च वृद्धेः
विबुधगणपतिन्तं न स्तुवन्त्यत्र के वा ॥

एतां सभां वर्धयितुं मुदा यः सर्वेषु मित्रेष्वपि बोधयित्वा ।
अवर्धयत्तं विबुधं स्मरामः श्रीशास्त्रिणं सांबशिवाभिधश्च ॥

बाल्ये य रचितादरा अपि मुदा भाषान्तरेषु स्वयं
पश्चाद्वैदिकशास्त्रमुत्तममिदं ज्ञातव्यमित्यादरात् ।
ज्ञात्वाऽद्वैतमतं च सम्यगधुना तद्वर्धनोद्योगिनः
श्रीमत्सुन्दररामसुख्यकृतिनः राजन्तु नित्यं भुवि ॥

आस्माकीनानादिकालप्रवृत्तभवरोगसमुन्मूलनबद्धकंकणा नित्यनिरतिशयानन्दरूपपरमात्मस्वरूपप्राप्त्यन्तसाधनीभूता समारब्धा चेयं श्रीमदद्वैतसभा वैदिकलौकिककार्यनिर्वहणपटुमतिमूर्धन्यैरास्तिकसमूहैः । अस्याश्च सभायाः षट्त्रिंशत्वर्षाण्यभूवन् । सांप्रतं सप्तत्रिंशत्तमवर्षीयसभा अस्मिन् ग्रामे प्रचलतितराम् । एतादृशग्रामविराजमानाः सकला अपि जनाः स्वस्वधर्मनिरताः आस्तिकाः दयालवः परोपकारिणः विशुद्धाश्च प्रकाशन्ते । किञ्च एतत्सभायाः उपक्रमकालादारभ्य प्रतिवत्सरं नियमेन एतादृशग्रामालङ्कारभूतानां महाशयानां द्रव्योपकारैरेव शुक्लप्रतिपच्चन्द्रकलेखेव उपर्युपरि महता उत्साहेन अधिकतरामभिवृद्धिमापन्ना इयं सभेति च सार्वजनीनमेतत् ॥

एतादृशकारणद्वयेन यदा कुंभघोणनगरात् बहिः प्रचालितुम् इयं प्रस्तुता, तदैव प्रथमापादस्य प्रक्षेपः अत्रैव कर्तुमुचितत्वेऽपि इदानीं तत्र-तत्र कठोरकलिः ताण्डवमातनोति अतः इयं सभा प्रथमं तत्र गत्वा सनातनधर्मं यथावत् स्थापयित्वा अनन्तरं अस्मद्ग्राममागता चेत् अलमिति एतदीयपरोपकारश्रद्धया बहुषु नगरेषु चरित्वा अधुना इमं ग्राममलंकरोति । अस्मिन् समये आस्माकीनपूर्वपुरुषाणां सुचरितनिचयैः एतद्ग्रामस्थमहाजनान्धन्यीकर्तुं इहागतया महितया सभया सर्वे वयं भाग्यशालिनो भवामः ॥

एतादृशभाग्यप्राप्तेः कारणीभूतेषु श्रीसुन्दररामार्यप्रभृतिषु सभाध्यक्षेषु वयं कृतज्ञतां निवेदयामः ॥

अपिच इमं ग्रामं स्वगृहमिव अभिमान्य यदा यदा यद्यत् करणीयं तत्तत् सर्वमपि अस्मन्मुखेन कारयित्वा अस्माकं श्रेयोभिवृद्धिः, आगतपण्डित प्रकाण्डानां सन्तोषः, सभाया उन्नतिश्च यथा भवेत् तथा अनुष्ठापयितव्या वयमिति सविनयं विज्ञापयति मकुटवर्धनग्रामवास्तव्यमहाजनानां प्रतिनिधिः

यम्. रामार्यः ॥

ஒரு வேண்டுகோள்.

கலியுகாதி 5032-க்குமேல் செல்லாநிற்கும் இப்பிரஜாபதி
வருஷத்தின் வாக்கிய பஞ்சாங்கங்களிலும் அவற்றைப்போலவே
திருக்கணித பஞ்சாங்கங்களிலும் ஸித்தாந்த பஞ்சாங்கங்களிலும்
ஸஹஸ்ராவ்ருத்தி காயத்ரீ ஜபம் என்னும் கர்மாவுக்கு விஹிதமா
யும் விகிதமாயுமுள்ளகாலங்கள் முறண்பட்டுக்காணப்படுகின்றன.
ஆதாவது:-வாக்கிய பஞ்சாங்கங்களான ஸ்ரீரங்கம் கோவில்பஞ்சா
ங்க கணித்மிராசுயோமியாதாதர்களின் பஞ்சாங்கத்தில்ஆவணிமீ
12௳ வெள்ளிக்கிழமை பௌர்ணமாஸீ 7-47 என்றும் மறுநாளா
கிய 13௳ சனிக்கிழமையன்று பிரதமை 12-9 என்றும் வெள்ளிக்
கிழமையன்று காயத்ரீஜபம் என்றிருக்கின்றது. மருத்துவக்
குடியினின்றும் வெளியாகும் பஞ்சாங்கத்தில் ஷை திதிகளின்
நாழிகைகளில் ஒரு விநாடி குறைந்திருக்கின்றது. ஆனால் காய
த்ரீ ஜபத்தை சனிக்கிழமை செய்யவேண்டியதாகக் குறிக்கப்பட்
டுள்ளது. த்ருக்பஞ்சாங்கங்களாகிய மைசூர் கர்னாடக பஞ்சாங்கத்
திலும் கும்பகோணம் ச்ரௌதிகள் பஞ்சாங்கத்திலும் தேசாந்தா
ஸம்ஸ்காரத்தாலேற்படும் விநாடிகளின் வித்தியாஸம் மாத்திரமே
நாழிகையிலுள்ளது. காயத்ரீ ஜபத்தைச் செய்யவேண்டிய
காலமோ முறண்பட்டேயுள்ளது, இங்ஙனமே கத்வால் ஆஸ்
தான பண்டிதர்களால் கணிக்கப்பட்டு பெல்காம் பாங்கரீ தாதா
சார்யரால் வெளியிடப்பட்டுள்ள ஸித்தாந்த பஞ்சாங்கத்திற்கும்
தஞ்சை அரண்மனை ஹிஸ் ஹைனஸ் பிரின்ஸ் ஸ்ரீ ப்ரதாபஸிம்ஹ
மஹாராஜா அவர்களின் உத்தரவில் வெளியிடப்பட்டிருக்கும்
ஸித்தாந்த பஞ்சாங்கத்திற்கும் முறண்பாடுள்ளது.

"ச்ராவண்யாம் பௌர்ணமாஸ்யா திலபக்ஷ உபோஷ்ய
ச்வோ வாபூதே மாஹாநதமுதகம் உபஸ்பருச்ய ஸாவித்ரியா
ஸமித்ஸஹஸ்ரமாதத்யாத் ஜபேத்வா"

என்று ஸூத்ரகாரராலும்,

"ஸந்திஸ்ஸங்கவதப்பச்சாத் அர்வாங்மத்யந்திநாத் யதி 1
தத்ரைவோபாக்ருதிம் குர்யாத் ஸத்யச்ச ஸமிதாஹுதி: 1
ஸந்திஸ்வங்கவத: ப்ராக்சேத் பூர்வஸ்மின் பர்வணி க்ரியா 1
ச்வோபூதே ஸமிதாதன மேஷச்ராவணி கோவிதி: 11"

என வைத்யநாத தீக்ஷிதராலும், "காயத்ரீ ஜபம்" ச்ராவண க்ருஷ்ணப் பிரதமை பிரதானம். பௌர்ணமி புச்சத்தையும் பிரதமை புச்சத்தையும் சேர்த்து பாதியாக்குவதில் பதினைந்து நாழிகைக்கு முன் வந்தால் முதல்நாள் அதாவது உபாகர்ம தினத்திலும், பின்வந்தால் மறு தினத்திலும் அனுஷ்டிக்கத் தக்கது. இரண்டு தினத்திலும் 12-நாழிகைக்குமேலிருந்தால் புச்சதினம் ப்ரதானம்" என மூணாம்பண்ணை க்ருஷ்ண ஜோஸ்யராலும் காயத்ரீ ஜபத்திற்குரிய காலத்தை விளக்கும் வசனங்கள்வரையப்பெற்றுள்ளன.

முற்கூறிய பஞ்சாங்கங்களையும் விதாயக வசனங்களையும் கவனிக்குமிடத்து இவ்வருஷத்தில் காயத்ரீ ஜபத்தை முற்குறித்த வெள்ளிக்கிழமையன்று செய்வதா? அல்லது சனிக்கிழமை செய்வதா? எனும்ஐயமுண்டாயிருக்கிறது இப்பிராந்தியங்களிலுள்ள பல வைதிகர்களுக்கும்.

ஆதலால் தர்மசாஸ்திர க்ரந்தங்களில் பயிற்சி, ஆராய்ச்சி, தேர்ச்சியுள்ள ஆஸ்திகர்கள் ஒருவிதமான நிர்ணயத்தை உலகத்தின் உபகாரம்கருதி இப்பத்திரிகை மூலமாகவே வெளியிடல் வேண்டுமெனப் பெரிதும் வேண்டுகின்றனம்.

வி. வைத்தினாத சாஸ்திரிகள்
சகாஜி நாயக்கர்தெரு தஞ்சாவூர்.

குறிப்பு:—இதற்கு ஸமாதானம் அடுத்த ஸஞ்சிகையில் வரும். [ப-ர்]

கங்காவதரண தத்துவம்.

2-வது ஸர்க்கம் பகீரதலாபம்.

(592-வது பக்கத்தொடர்ச்சி)

பிறகு பகீரதன் ஒரு ஸந்தர்ப்பத்தில் சபையில் வீற்றிருக்கும் போது விருத்தர்களான பந்துக்களிடமிருந்து தனது முன்னோர்களான ஸகாகுமாரர்களின் வாலாற்றைக் கேள்வியுற்றான். ஸக

சக்கிரவர்த்தி அச்வமேதயாகம்புரிந்ததையும் அச்வஸம்ரக்ஷணத்திற்காகப்புறப்பட்ட ஸகரகுமாரர்கள் அறுபதுனாயிரம்பேர்களும், பூமியைத்தோண்டி, பாதாளஞ்சென்று அங்கு தவஞ்செய்யும் கபில முனிவரையும் அவர்முன்னிலையில் குதிரையையுங்கண்டு அச்வாபஹாரி இவர் என்று அம்மஹானை திரஸ்கரித்து அவருடைய ஹுங்காரத்வனியாலேற்பட்ட அக்னியால் அவர்கள் சாம்பலாக்கப்பட்டதையும் பிறகு அச்சக்கிரவர்த்தியின் மற்றொருமனைவியிடம் ஜனித்த அஸமஞ்ஜஸனுடைய பிள்ளையான அம்சுமானால் அச்வத்தை கொணர்ந்து அச்வமேதம்பூர்த்தியானதையும் விபரமாகக் கேட்டு ஆச்சர்யமும் சோகமுமடைந்தான்.

பின்பு திரோதாத்தனன அப் பகீரதன், எனது முன்னோர்களான ஸாகரர்களைப் புண்ணிய லோகத்தில் சேர்க்க உபாயம்என்ன என்று கேட்கவே குல குருவான வஸிஷ்டமாமுனிவர் அருகிலமர்ந்து இவ்வாறு சொல்லலானார்

कन्यकास्ति कुटिलेति हिमाद्रेः ज्यायसी स्मरणताऽप्यघहन्त्री ।
सङ्करस्य वितरातु मम त्याः सत्यलोकमनयन्त शिशुं ताम् ॥९॥
आकलस्य विबुधापहृतां तामष्टभिश्च नयनैर्द्रुहिणः प्राक् ।
नार्हतीश्वरमियं तु वराकी मुच्यतामिति गिरा निरतक्षत् ॥

ஸ்மரண மாத்திரத்தாலேயே பாவங்களைப்போக்க சக்திவாய்ந்தவளும் குடிலையெனப் பெயர் வாய்ந்தவளுமான ஒரு மூத்த பெண் ஹிமாலயத்திற்கு உண்டு. குழந்தைப் பருவத்திலேயே தேவர்கள் அவளை சிவபெருமானுக்குக்கொடுக்கக்கருதிமுதலில்ஸத்யலோகங் கொண்டுபோயினர். அதையறிந்த பிர்ம தேவர் தனது எண்கண்களாலும் அவளை உற்றுப் பார்த்து இவள் ஈச்வரனையடையத் தகுதியுள்ளவள் அல்ல விடப்படட்டும் என்று அவளைக் கடிந்து பேசினார்.

பின்பு அவள் ஏதோபதிலுரைக்கும்பொழுது கர்வங்கொண்டவளாகக்கருதி பிரமன் அவளை ஜல ரூபமாகக்கடவாய் என்று சபித்தார். அதையும் அவள் அனுக்கிரஹமாகவே எண்ணி பிரளய கால சமுத்திரங்கள்போல கோரங்களான அலைகளால் கபளீகாரம்பண்ண முயலவே பிரம்மதேவன் நான்குவேதங்களை அணைகளாகக்கட்டி நிறுத்தினர். வாமன புராணத்தில் இவ்விஷயம் விரிவாககூறப்பட்டிருக்கிறது.

ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் பிரும்ம தர்க்கஸ்தவத்தில் அடியிற்கண்ட ச்லோகத்தால் இக்கருத்தை வெளியிடுகிறார்.

गङ्गापि नैव भवता करिचर्मधारिन्
मूर्ध्ना धृता मधुरिपोश्चरणात्क्षरन्ती ।
किन्तु प्रसादनपराय भगीरथाय
दत्वा वरं शतधृतेः सदनात्पतन्ती ॥

கிருத்திவாஸஸ்ஸான சிவபெருமானே! த்ரிவிக்ரமனின் சரணத்திலிருந்து பெருகின கங்கை உம்மால் தலையால் தரிக்கப்படவில்லை; ஆனாலோ, பக்தனான பகீரதனுக்கு வரனைக்கொடுத்து, பிரும்ம லோகத்திலிருந்த குடிலை என்ற கங்கை தரிக்கப்பட்டது.

அதன் வியாக்கியானத்தில் புராணக் கோட்பாடுகளுடன் அவைகளின் விரோத பரிஹாரமும் நன்கு கூறப்பட்டிருக்கிறது. அதைத்தனியாக மற்றொரு சமதர்ப்பத்தில் எழுதுகிறேன்.

தீக்ஷிதாளின் ஹிருதயத்தை அனுஸரித்தே இந்த கங்காவதரண காவ்யம் இயற்றப்பட்டிருக்கவேண்டுமென்று பிரும்மதர்க்கஸ்தவத்தை விமர்சித்தவர்கள் நிச்சயிப்பார்கள்.

பிரகிருத்தில் விசாரிப்போம். வஸிஷ்டர் பகீரதனைப் பார்த்துச் சொல்லுகிறார்- அந்நதியை பாதாளத்திற்குக்கொண்டு வந்து, அவர்களுக்குத் தர்ப்பணஞ்செய்யவேண்டுமென்று, கருடனால் அறிவிக்கப்பட அம்சுமானும் அவனுக்குப்பின்பு அவனது குமாரனான திலீபனும் கொடூமான தவம்புரிந்தும் இஷ்டஸித்தி பெறவில்லை. நீ யத்தனித்தால் பயன்படும்—என்று.

இவ்விதம் வஸிஷ்டர் சொன்னதைக்கேட்டு பகீரதன் அவரது ஆசிகளைப்பெற்று மந்திரிகளிடம் ராஜ்யபாரத்தை ஒப்புவித்துவிட்டு, வனஞ்சென்று கொடூரமான தவம்புரிந்தான். அவனது தவத்தால் சந்தோஷித்த பிரம்மதேவர், முன்னால் ஆவிர்ப்பவித்து வரனைக்கேட்டுக்கொள் என்கவே, பகீரதன் ஸாஷ்டாங்கமாக வணங்கி எனது பாட்டனார்களுக்குகங்காதீர்த்தத்தால்நான் தர்ப்பணஞ்செய்ய அனுக்கிரஹிக்கவேண்டுமென்றான். உடனேபிரம்ம தேவர் “அப்படியே ஆகட்டும் என்று அனுக்கிரஹித்து கங்காதேவியை அவனது பக்கத்திலேயே காண்பித்து, அந்தர்த்தானமானார்.

संव्यानमूर्मिलतिकाव्यतिषङ्गलब्ध -
फेनानुलेपमिव पाण्डरमावहन्तीम् ।
पश्यन्पुरस्तनुमतीं सुरलोकसिन्धुं
सिद्धं मनोरथममंस्त दिलीपसूनुः ॥

அலைக்கொடியின் சம்பந்தத்தாலடையப்பட்ட நுரையின் பூச்சையுடையதுபோல் வெளுத்த வஸ்திரத்தை வஹித்தவளும், மூர்த்தியோடு கூடினவளுமான தேவலோக நதியைமுன்னால் பார்க்கின்ற பகீரதன் மனோரதம் நிறைவேறிவிட்டதாக எண்ணினான்.

பகீரதலாலாபம் என்ற இரண்டாவது ஸர்க்கதத்துவம் முற்றிற்று.

கங்காஹங்காரம்.

பிறகு பகீரதன் நமஸ்காரங்களாலும் துதிகளாலும் தேவலோக நதியைச் கொண்டாடவே அவள்கூறத்தொடங்கினாள். அரசனே எனது வேகத்தைத்தாங்க யாவராலும் முடியாது, நான் விழத்தொடங்கினால்அண்டகடாஹமும் சிதறிப்போகும், உலகமே மூழ்கிப்போகும் அதனால் உனது இஷ்டம்சித்தியாகாமல் போய்விடும் எனதுபிரவாகவேகத்தை படபாக்கினியும் ஸமுத்திர பாயியான அகத்தியமுனிவரும் மற்றுமுள்ளயாவருமே நின்றுதாங்க மாட்டார்களென்று.

இவ்வாறுசொல்லவே மறுபடியும் பகீரதன் அந்த கங்காதேவியைத்துதிக்கவே அவள் சொல்வதாவது--பிரவாஹமில்லாமல் எனது திவ்யரூபத்தால் ஸகர குமாரர்களைக் கரையேற்றுவது எப்படிசாத்யமாகும்?

ग्रहस्तवायं यदि तात तर्हितां गृहाण गङ्गाममरावतीं गताम् ।
भणन्ति लक्ष्मीदयिताङ्घ्रि ताडनप्रभिन्नविध्यण्डपरिस्रुतेति याम् ॥१०॥

உனக்கு கங்கைவேண்டுமென்று ஆக்ரஹமிருந்தால் மஹாவிஷ்ணு திரிவிக்கிரமாவதாரமெடுத்தகாலத்தில் அவரது காலால் உடைந்த பிரம்மாண்டத்தில் பெருகின கங்கையை வாங்கிக்கொண்டு செல்வாயாக என்று.

அப்போது பகீரதன், தேவர்களில் அக்கார்யத்தை சாதித்துத்தரும் வன்மை பொருந்தியவர் யார்?என்று யோசித்துத்தயங்கினான்.பிரம்மதேவரோ கிழவர் மஹாவிஷ்ணுவோ அனேக அவ

தாரங்கள் எடுத்து ஆச்சர்யங்களானகார்யங்களைச்செய்திருக்கிறார யினும், பரமேச்வரன் சரபாவதாரம் முதலானவைகளால் அவ்விஷ்ணுவின் அவதாரங்களையும் அடக்கியிருக்கிறார். அவரையே தக்கவராகக்கருதி வேண்டிக்கொள்வோமென்றால் விஷ்ணுவானவர் பாணாசுரயுத்தத்தில் அவரைத்தோற்கடித்திருக்கிறார் என்றுதெரிகிறது.

अतो न किञ्चित्त्व्यवसातुमीश्महे मतिं स्वकीयां बरमास्थिता वयम् ।
न कूपमण्डूकनिभा मतिर्नृणां क देवता तत्त्वविचारचातुरी ॥

ஆகையால் நமது மதியைக்கொண்டே ஒன்றையும் தீர்மானிக்க முடியாதவர்களாகிறோம். "கிணற்றுத் தவளைக்கொத்த மானிட புத்தி எங்கே? தெய்வங்களின் தத்துவ விசாரஞ்செய்யும் சாதுர்யம் எங்கே?" என்று பகீரதன் சிறிது தியானிக்கவே பிரம்மன் முன்தோன்றி, சிவபெருமானின் மஹிமையை உரைக்கலானார்.

குழந்தாய்! சிவபெருமானிடம் இவ்வாகாய கங்கையின்வேகம் என்செய்யும்? ஸகலஜகத்துக்கள் தானுகட்டும்; அவர்முன்னிலையில் எம்மாத்திரம்? உனது பூர்வஜன்ம புண்யபரிபாகத்தாலே அவரே உனது கார்யத்தை முடித்துத்தரப்போகின்றார். சிவபெருமானின் அம்சாவதாரமான வீரபத்திரர் முதலானவர்களால் தக்ஷயாகத்வம்ஸம் முதலான திருவிளையாடல்கள் ஏற்படவில்லையோ? அவருடைய பராக்கிரமத்திற்குக் குறைவுபாடு உண்டென்று, ஸாமான்ய சேதனர்களும் சொல்லத்துணியார்கள். அங்ஙனமிருக்க விவேகிகள் எங்ஙனம் கூறுவார்கள்?

पुरा मुकुन्दाय तथा तपस्यते पुरोहितस्तत्प्रतिपादितं वरम् ।
न पालयेद्बाणपुरे यदिस्वयं भजेदमुं पार्थिव देवतेतिकः ॥

அரசனே! முன்பு தவஞ்செய்த முகுந்தனுக்குத்தானே கொடுத்த வரத்தைப் பாணாஸுர யுத்தத்தில் பாதுகாக்காமற்போனால் இவரை யார்தான் தெய்வமென்று பஜிப்பான்.

மேலும் இவ்வுலகம் எவரால் படைக்கப்படுகிறதோ, அந்த பிரமன் எவரிடம் ஜனித்தாரோ; அவரும் எங்கு லயப்படுகிறாரோ; அவரும் யாரால் அனுக்கிரஹிக்கப்படுகிறாரோ; அவரைக்காட்டிலும் மேலானதாக அத்தெய்வத்தை அறிந்துகொள். ஈசானன், ஹரி, இந்திரன், பிரமன் முதலானவர்கள் எந்த வஸ்துவினிட

மிருந்து உண்டாகின்றன என்றும், யாவரையும்விட்டு எந்தப் பொருளே வணங்கக்கூடியதென்றும் அதர்வோபநிடதங்கள் கோஷிக்கின்றனவோ; பிரமாணங்களில் மூர்த்தன்யங்களான மறைகள் நான்கும் எவரிடமிருந்து வெளிப்பட்டனவோ; அதிகம் சொல்வானேன்? முதலில் வெளியான பிரணவமும் அதர்வோபநிடதத்தில் எவரைவெகுவாய்ப் பிரார்த்திக்கிறதோ;

प्रभुं प्रशान्तं परमेश्वरं च यं भणन्ति कैवल्यगिरः परिस्फुटम् ।
यमेव विश्वाधिक इत्यनुश्रवाः प्रचक्षते कण्ठरवेण नापरम् ॥
यदाप्तिहेतोर्यतते जगत्त्रयी यदेव चाढ्यं फलराजसाधनम् ।
तयैव देव्या स्वयमात्मविद्यया यदीयमर्धं वपुषो विभूषितम् ॥
सुखावहो यःकिल शंभु शङ्कराद्यभिख्यया योवपुषाऽतिनिर्मलः ।
तपोभिरल्पैर्दयते च देहिनां स देवदेवः शशिखण्डमण्डनः ।
य एव सर्वज्ञ इति प्रघुष्यते विशुद्धसत्वात्मकतां विभावय ॥
दयापि सा देय मदेयमित्यमुं विभागमेव प्रथमं न बुध्यते ॥

பிரபு, பிரசாந்தன், பரமேச்வரன் விச்வாதிகன் என்று எவரையே கைவல்யோபநிடதங்கள் கூறுவதுடன் மற்றவரை வெளிப்படையாகப் பிரஸ்தாபிக்கிறதில்லையோ; மூவுலகத்தாரும் எவரையே அடைவதற்கு முயல்கின்றனரோ; எவரே மோக்ஷத்தையடைய முதலாவது ஸாதனமோ; எவருடைய பாதி உடல் ஆத்மவித்தியா ரூபிணியான பராதேவதையால் அலங்கரிக்கப்படுகிறதோ; சம்பு, சங்கரன் முதலான திருநாமங்களாலேயே எவர் சுகத்தைத் தருகிறாரோ; எவர் சரீரத்தால் மிகவும் ஸ்வச்சரோ; ஸர்வக்ஞன் என்று எவரே உத்கோஷிக்கப்படுகிறாரோ; அந்த சிவபெருமானை சுத்த ஸ்வரூபியென்று உணர்வாயாக. மேலும் அற்ப தவஞ்செய்கின்ற பிராணிகளிடத்தும் அந்த சந்திரசூடன் தயையைக் காட்டுகிறார். தயாரூபிணியான அவ்வுமாதேவியும், வேண்டுவோர்களின் வரன்களையளிக்கும் விஷயத்தில் கொடுக்கலாமா, வேண்டாமா, என்ற பிரிவினையையும் முதலில் யோசிக்கிறதேயில்லை.

என்று பிரம்மன் பசீரதனுக்கு அறிவித்து மறுபடியும் சிவதீக்ஷைசெய்து பஞ்சாக்ஷரோபதேசஞ்செய்தார். அத்திருமந்திரம் அவனது செவிகளில் நுழையும்போதே சந்திரகலைபோல் பிரகாசித்த வண்ணமாய் பஞ்சபாணனின் அம்பு யுவர்களின் மனதைப் பிளப்பதுபோல்; அவ்வாசனின் தமோகுணங்களையகற்

றிற்று. பிரம்மன் சென்றதும், பகீரதன் மனோபீஷ்டம் கைகூடி னவனாய், தவஞ்செய்பவிரும்பி, மிகவும் பயங்காமான ஹிமால யத்தை அடைந்தான். பிறகு நான்கு ச்லோகங்களால் கவிமணி யானவர் அம்மலையின் சிறப்பை வர்ணித்து மறுபடியும் புகழ்வ தாவது—

तपोविशुद्धे हृदये तपस्विनामपिक्षणादूर्ध्वमवस्थितो न यः ।
स एव यत्सानुविहारकौतुकी सदा महेशो यदि किं ततोऽधिकम् ॥

தவத்தால் பரிசுத்தமான முனிவர்களின் ஹிருதயத்திலும் எந்த மஹேச்வரன் ஒருகண நேரத்திற்குமேல் இருக்கமாட்டாரோ; அவரே யாதொரு மலைத்தாழ்வரைகளில் க்ரீடை செய்வதில் ஆவ லுள்ளவராய் இருக்கின்றனர் என்றால் அம்மலையைக் காட்டிலும் உத்க்ருஷ்டமான மலை என்ன இருக்கப்போகிறது? இதேமாதிரி மறுபடியும் வர்ணித்துக் கைலயங்கிரியையும்புகழ்ந்து, பிரமதகணங் கள்முதலானவர்களின் வைபவங்களையும் கூறி முடிவில் 72-வது சுலோகத்தில் தவத்தின் நிலையைக்கூறுகிறார்.

सुरसिद्धतापसगतागतोचितां परिहृत्य तत्र पदवीं भगीरथः ।
अधितिष्ठतिस्म तटमस्य पावनं हृदयं च तस्य पुनरिन्दुशेखरः ॥

அக்கைலமலையில் தேவர்கள், சித்தர்கள், தாபஸர்கள் இவர்களின் போக்குவரத்தாயுள்ள மார்க்கத்தை விட்டுவிட்டு பகீரதன் பரிசுத் தமான ஓரிடத்தில் வஸித்தான். சந்திரசூடாமணியோவெனில் அந்த பகீரதனின் ஹிருதயத்தில் வஸித்தார்.

கங்காஹங்காரம் என்ற மூன்றாவது ஸர்க்க தத்வம் முற்றிற்று.

K-V- சுப்பிரமணிய சாஸ்திரி

அத்வைதமததமே வைதிகம்.

(558-வது பக்கத்தொடர்ச்சி)

காமம் மோக்ஷம் இரண்டும் ஸ்வரூபமாய் முக்யபுருஷார்த்த மென ஒற்றுமைபட்டிருந்தாலும் அவற்றுள் காமம் அழிவுடைய தாய்ச் சிற்றின்பமாய் தனக்குமேல் ஒரு புருஷார்த்தத்தை உடை யதாய்க் காமமாகிய தன்னை அடைந்த மாத்திரத்தில் புருஷன் கிருதார்த்தன் என்று சொல்லமுடியாததாயுள்ளது.

कुल्याः कृता विशालाः कुड्यान्युपलैर्निबद्धानि ।
क्रीता बलिनो माहिषा कृतकृत्याःस्म इति मन्यन्ते ॥

"தாங்யங்கள் விளையும் வயல்களில் ஜலம் பாய்வதற்காக வாய்க்கால்களை விசாலமாகவும் ஆழமாகவும் வெட்டிவிட்டோம். நாம் வஸிக்கும் கிருஹங்களிலுள்ள சுவர்களை விழாதபடி நல்ல கல்களால் காரைஸிமிண்டு முதலியவைகளுடன் கட்டிவிட்டோம். வயல்களை ஒழுவதற்காக பலமுள்ள மஹிஷங்களை வாங்கிவிட்டோம். அதனால் நாம் அடையவேண்டிய புருஷார்த்தத்தை அடைந்துவிட்டோம், என்று ஜனங்கள் எண்ணுகின்றார்கள்" என்று நீலகண்ட தீக்ஷிதர் கூறியபடி பாமரர்களாய் அவிவேகிகளான ஜனங்கள் கீழ்க்காட்டிய ஸாதனங்களால் ஏற்படும் காமமாகிய புருஷார்த்தத்தை அடைந்தமாத்திரத்தில் கிருதார்த்தர்களெனத்தம்மைப் பிராந்தியால் நினைத்த பொழுதிலும்

विश्लेषणस्वभावान् विषयान् पश्यन् करोति को ममताम् ।
नश्यदवस्थापन्नं कः क्रीणीते धनैरश्वम् ॥

"நாசத்தை அடைந்து தன்னைவிட்டுப் பிரியும் ஸ்வபாவமுள்ளதான விஷயங்களை அவ்வித ஸ்வபாவமுள்ளதென அறிந்த எந்த விவேகியானவன் அதுகளில் இது என்னுடையதென்றும் மமதாபிமானத்தைச் செய்வான். நசிக்கும் அவஸ்தையோடு கூடிய அதாவது முமூர்ஷாவஸ்தையுள்ள அச்வத்தை (குதிரையை) அது உயர்ந்த ஜாத்யச்வமாயிருந்தபோதிலும் எவன் ஏராளமான பணத்தைப் போட்டுவாங்குவான்" என்று நீலகண்ட தீக்ஷிதர் கூறியபடி விவேகியாயுள்ள புருஷன் நச்வரங்களான விஷயங்களாலுண்டாவதும் அதனாலேயே அழிவுள்ளதுமான காமமாகிய புருஷார்த்தத்தை அடைந்தமாத்திரத்தில் கிருதார்த்தனாகிவிட்டேன் என்று தன்னை நினைக்கமாட்டான். பின்னையோவெனில் அதற்குமேல்பட்ட புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை அடைய விரும்புவான். அதை அடையும் வரையில் தன்னை கிருதார்த்தன் என்று நினைக்காமல் அதை அடைந்தபிறகே தன்னை

धन्योऽहं धन्योऽहं कर्तव्यं मे न विद्यते किञ्चित् ।
धन्योऽहं धन्योऽहं प्राप्तव्यं सर्वमद्य संपन्नम् ॥

"நான் தன்யனாய்விட்டேன், நான் தன்யனாய்விட்டேன், எனக்குச்செய்யவேண்டிய கார்யம் ஒன்றுமில்லை .நான் தன்ய

னுய்விட்டேன், நான் தன்யனுய்விட்டேன் என்னல் அடைவேண்டியதெல்லாம் இப்பொழுது அடையப்பட்டுவிட்டது. என்று வித்யாரண்ய ஸ்வாமிகள் பஞ்சதசியில் வித்யானந்தப் பிரகரணத்தில் கூறியபடி கிருதார்த்தனென்று நினைப்பான். ஆகையால் காமம் கீழ்க்கூறியபடியுள்ளது. மோக்ஷம் அழிவில்லாததாய்ப் பேரின்பமாய்த் தனக்குமேல் ஒரு புருஷார்த்தத்தை உடைத்தாகாமல் தானே எல்லாவற்றிற்கும் மேலான புருஷார்த்தமாய் மோக்ஷமாகிய தன்னை அடைந்தமாத்திரத்தில் புருஷன் கீழ்க்கூறியபடி கிருதார்த்தன் என்று சொல்லும்படியாயுள்ளது. ஆதலால் இவ்விதம் காமம் மோக்ஷம் இரண்டும் வேற்றுமையுள்ளது. இவ்விதம் வேற்றுமையுள்ள காமம் மோக்ஷம் இரண்டனுள் மோக்ஷம் காமம் எனக்கிரமம் கூறுவது பொருந்தாது. ஏனெனில் மோக்ஷம் என்று கூறியபிறகு அதுவே உயர்ந்த புருஷார்த்தமானதால் அதற்குமேல் ஒருபுருஷார்த்தமுண்டோஎன்று ஆகாங்க்ஷை இல்லாமல் அத்துடன் பரிஸமாப்தி ஏற்படுகிறது. பிறகு ஒன்றைச் சொல்வது அனுகாங்க்ஷிதாபிதானமாய் முடியும்.

(தொடரும்) போலகம், ஸ்ரீராமாசாஸ்திரிகள்

வாரவிருத்தாந்தம்

அது நியாயமே:—மஹம்மதியர் மதசங்கத்திற்கு ஜமயத்தில் உலாமா எனப்பெயர். அதன் தலைவர் ஸ்ரீமான் காந்திக்கு ஓர் கடிதமெழுதினர். அதில் தங்கள் பள்ளிவாசல் கல்விமத ப்ரசாரம் விவாஹம் பிரார்த்தனைஸ்தலம் மத ஊர்வலம் முதலிய விஷயங்களில் தங்களுக்குப் பூர்ண சுதந்திரமளித்து மற்றோர்தலையிடாவிடின் ஸ்வாராஜ்யத்திற்கு தாங்கள் குறுக்கே நிற்பதில்லை என விளக்கினர். இது முற்றிலும் நியாயமே. இங்ஙனம்பேச இந்தியா மதாபிமானி இசையவில்லையே என்பதே நம் வருத்தம். மதாபிமானத்துடன் கோரும் ஸ்வாராஜ்யமே நாம் வேண்டுவது.

கற்புங்குற்றமா:—பெஷாவரில் ஓர் விதவையைக் கற்பழிக்க ஒருவன் முயன்றான். அநாதையான அவள் வேறு வகையில்

லாமல் கல்லை எறிந்தாள். காயமுண்ட அவன் சிலநாள் கழித்திறந்தான் ஆகலின் அப்பெண்மீது அரசாங்கம் கொலை வழக்குத் தொடுத்திருக்கிறது. அவள் வலுவிலேசென்று எவரையும் ஹிம்ஸிக்கவில்லை. உயிரைவிட கற்பு தர்மம் சிறந்ததென்பதை அரசாங்கமும் ஏன் தற்காலத்தவரும் அறியவில்லை.

மதாபிமானத்தால் பிழைத்தார்:—அமெரிக்காவில் ஓர் கொள்ளைக்கூட்டம் ஓர் பாதிரியைப் பிடித்துக் கொல்லும்போது மற்றோர் மதாபிமானங்கொண்ட கொள்ளைக்காரர் அவரை விடுவித்தார். மதாபிமானங்கொண்டு பூர்ணமாக அதை அனுஷ்டியாதிருடனே மதாபிமானியை ரக்ஷித்தான் எனின் மதாபிமானத்தின் மஹிமையைக் கூறவேண்டுமோ? எல்லோருக்கும் பாதிரிகள் ஜெயிலில்சென்று கிருஸ்துவமத போதனம் செய்வதுபோல் அங்கும் நம் மதப்ராசாரம் செய்தல் அவச்யம்.

அதர்ம ப்ரசாரம்:—அதர்மம் அன்யாயம் முதலியவை இயற்கையாகவே களைத்து ஓங்கும். தர்மம் நியாயம் இவைகளே ப்ரசாரத்திற்கேற்றவை. ஆயினும் கலி அதர்மம் விருத்தியாகவில்லை என வருந்தி சீர்திருத்தக்காரர் சுயமரியாதை அப்ராமணர் காங்க்ரஸ் ஆர்யஸமாஜம் பிரும்மஸமாஜம் விதவாவிவாஹசபை முதலிய பல ப்ரசார வகைகளைக் கண்டனன் போலும்! பாமக்குடியில் சென்றவாரம் வைதிகாது கொள்கை நீசமான சொற்களால் தாக்கப்பட்டது. இதிஹாஸ புராணமும் சிஷ்டாசாரமும் இகழப்பட்டது. ஸமீபத்தில் ஓர் பெரும்ஸபை கூடப்போகிறது! பெயருக்குப்பல ஆஸ்திகஸபைகளிருக்கின்றன. ஒன்றுசேர்ந்து இப்ரவாஹத்திற்கு அணைகோல்லாகாதோ?

கற்புள்ளோர் கவனிக்க:—தாங்கம்பாடியில் 20-வயதுள்ள யுவதி தன்னை போலீஸ் சேகவர் கற்பழிக்க முயன்றதாக வியாஜ்யம் கொடுத்திருக்கிருள், 500-ஜனம் கோர்ட்டில் கூடிற்று, இதைப்பற்றி நாம் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. தேசாபிமானமென்றோ மற்ற வகையிலோ பெண்கள் வெளிவருவதால் வரும்பயனிது. இதில் தலையிட்டுபின்னர்வியாஜ்யம்செய்து பரிஹாரம்தேடுவது சேற்றைப்பூசிக்கொண்டு அலம்பிவிடலாமென்பதுபோல். சேற்றை அலம்பலாம். போனகற்பை பெறுவதெப்படி?

प्रक्षालनाद्धि पङ्कस्य दूरादस्पर्शनं वरम् ।

மற்றவர் பின்பற்றுக:—நாஸிக் க்ஷேத்திரத்தில் தீண்டாதார் பலாத்காரமாக (பெயரென்னமோ ஸத்யாக்ரஹம்) ஆலயத்தில் நுழைவது தவறென்றும் உடனே தக்க முயற்சிசெய்து அரசாங்கம் அதைத் தடுக்கவேண்டுமென்றும் முனிஸிபாலிடியார் தீர்மானித்தனர். ஸ்ரீ ஜகதாசார்யாள் தோன்றிய சோளத்திலோ, மாகாண காங்க்ரஸ் ஸபையோ தீண்டாதாரைக்கொண்டு ஆலயத்தில் ஸத்யாக்கிரஹம் செய்யப்போகிறது. இதை எதிர்த்து ஸபை கூடி அரசாங்கத்திற்கறிவித்து விபரீதம் விளையாதபடி தடுக்க ஓர் உண்மை மதாபிமானி சோளத்திலில்லையோ? நகரசபையார் ஊரின் தந்தை எனப்படுவர். மக்களுக்கு தீங்குண்டாகாதபடிகாக்க முன் வருவரோ?

சைதன்யமதம்:--சென்னை, பெஸண்ட்கோஷ்டி ஆர்யஸமாஜம் பிரும்மஸமாஜம் விதவா விவாஹஸபை முதலியபல கலிபடர்களை ஆதரித்து வருகிறது. ஸமீபகாலந்தொட்டு ஸ்ரீ கிருஷ்ணசைதன்ய மதத்தைத் தழுவிய சிலர் தெருத்தெருவாக பஜனை நடத்திப் பல உபன்யாஸம்புரிந்து வருகின்றனர். பக்தியையே முக்யமாகக் கொண்டு அவர்செய்யும் உபந்யாஸத்தில் கெடுதலில்லை. அவரது வேஷம் மற்ற ஆசாரங்கள் தர்மத்திற்குரியதாகயில்லை. எனினும் சென்னையை இதுவும் ஆகர்ஷித்துவருகிறது? நல்லதைக்கொண்டு தீயதைவிடுவோர் பக்தர்.

மதிகெடும் முன்னே:—எதாவது ஒருகேடு ஒருவனுக்கு வருவதாயின் அதன் முன்னே அவர் புத்தி கெடுமென்பர். புதுக்கோட்டை தர்பார் கோயிலுள்ள ஸ்ரீ கிருஷ்ண விக்ரஹத்தை காக்ஷிசாலைக்கு அனுப்பியதாம். இது உண்மையாயின் ஜனங்கள் ஆத்திரப்பட்டது ஆச்சரியமில்லை. ஊரெல்லாம் வியாதியும் கொள்ளையும் உண்டாயிருக்கிறது. இதற்குமதற்கும் கார்யகாரணபாவம் கல்ப்பிப்பது தகாததல்ல. இனியேனும் மற்றோரும் அர்சாங்கமும் தேவகுற்றம் செய்யாமலிருப்பாராக.

யுத்தமுஸ்தீப்பு:— சாரதாசட்டத்தைத் துலைக்க இந்திய சட்டஸபையில் சில திருத்தங்கள் வரப்போகின்றன. இதைக் கண்டு பயந்து தர்மவைரிகள் அதை எதிர்க்க பலமான ப்ரயத்னம் செய்கின்றனர். பல பெண்மக்கள்ஸபை சென்னையில் கூடின. ஸர் ஸீ. பி. ராமஸ்வாமி அய்யர் சட்டமெம்பராயிருப்பதால் அவர்

அரசாங்கம் மதத்தில் நடுநிலை வஹிக்கவேண்டுமென்றதால் தங்களுக்கு பிரதிகூலமாயிருப்பரோ என்றஞ்சுகின்றனர். தங்களது திருத்தத்திற்கனுகூலமாக கூட்டங்கூடி ஆதரிக்கவேண்டுமென அங்கத்தினர்கள் கேட்டும் தஞ்சைஜில்லா பிராமணஸபை பலமுறை வேண்டியும் நாம் வற்புறுத்தியும் ஒரு கூட்டங்கூட நம்மவர் கூடவில்லை. தர்மசாஸ்திரமென்பது தேர். வேதங்கத்தின தர்மநூல் கூற அதை உபயோகிக்கும் புருஷன் வாராததைக் கண்டு வருந்துகிறோம். ஸமயத்தை இழக்காதீர்கள் !!

மதாபிமானி வாழ்க. எம்மதமாயினும் மதாபிமானிகளைக் கொண்டாடாமலிருப்பதற்கில்லை. மெக்ஸிகோவில் அரசாங்கம் மதத்தில் தலையிட்டு பாதிரிகளைக் குறைத்ததால் கோபங்கொண்ட சிலர் கவர்னரைச் சுட்டு யுத்தம் செய்தனர். அவ்வழி அநுசிதமானதாயினும் மதாபிமானம் போற்றற்கேற்றதே. வைதிகர் பாரதர் விழிப்பரோ ?

மாத்ருபாஷையை மறவாதே. இம்மணிவாசகத்தைக்கூறியவர் மஹாராஜகுமாரர் காசிநாதஜீ என்ற ரஜபுத்ரனைச் சேர்ந்தவர். மைசூர் மஹாராஜாவின் ஸம்ஸ்கிருத கலாசாலையைப் பார்த்து ஸம்ஸ்கிருதங்கற்கவேண்டிய அவச்யத்தை வெளியிடும்போது இங்ஙனம கூறினர். பிராமணர்கள் ஸ்கூலில்கூட தன் பிள்ளைகள் ஸம்ஸ்கிருதங்கற்பதை விரும்புவதில்லை எனில் அவர்களது நிலைக்கு பச்சாத்தாபப்படுவதைத் தவிர நாமென்ன செய்வது ?

பார்னஸ் பிராமணனா? டாக்டர் பார்னஸ் என்ற ஆங்கில வித்வான் விக்ரஹாராதனம அவச்யம். அது தக்கவரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டால் தேவதாஸான்னித்யம் அதில் உண்டாகிறது என்று கூறி நமது வழக்கத்தைப் போற்றுகிறார். நமது நாட்டிலோ பிழைப்புக்காக பிராமணர் கல்பித்தது ஆலயமென்று சிலர் பலரை மயக்கிவருகின்றனர். ஆலயத்தில் யார் உள்ளே சென்றாலென்ன என்போரும் இதைக் கவனிக்கட்டும்.

வே. ஸோமதேவ சர்மா.